தென்னகம்

ஆசிரியர்: K.A. மதியழகன்

வெள்ளி | 30 – 10 – 59 | விலை 16 காசு

"வெண்புரு" சைனுவின் – – விபரீதப் போக்கு!

ப.வாணன்

இந்திய உபகண்டத்தின் வடக்கெல்லை இமாலய மலைத் தொடர். உலகத்தில் உயரமான சிகரத்தைக் கொண்ட இம்மலைத் தொடரைத் தாண்டி இந்திய மண்ணில் காலடி வைத்த அந்நியன் இது வரையில் எவனுமில்லை! சிறிய ஆசியாவிலிருந்தும், மத்திய ஐரோப்பாவிலிருந்தும் வரலாற்றின் ஆரம்ப காலங்களில் வந்த போர்த் தளபதிகளும், ஆக்கிரமிப்பாளர்களும் கைபர், போலன் கணவாய்கள் மூலமாகவே இந்நாட்டில் நுழைந்தனர்.

ஆனல் இந்தத் துணைக்கண்டத்தின் வரலாற்றில் இன்று புதிய அத்தியாயம் துவக்கப்படுகிறது! 'உலகத்தின் கூரை, என்றழைக்கப்படும் திபெத் நாட்டைத் தாண்டி, இமயமலை மீது கிழிக்கப்படும் நமது எல்லைக் கோட்டை துச்சமாக்குகின்றனர் சைனுக்காரர்கள். மூவாயிரம் மைல்களுக்கு மேல், இமயமலைமீது குறிக்கப்படும் நமது எல்லைக் கோட்டை சரி செய்யவும், புதுப்பாதையிலே திருப்பிவரையவுமான துணிகரச் செயலில், மாசேதுங் சர்க்கார் இறங்கி இருக்கிறது. நமது எல்லைக் கோட்டை அவர்கள் மாத்திரம் வரைவதா, புதுப்பிப்பதா... என்றெல்லாம் கேட்கத்தோன்றும் இந்த நாட்களில் அவர்கள் செய்யும் எதையும் நாம் எதிர்த்துகேட்கவே கூடாது. கேட்டால் பாட்டாளிகளின் விரோதிகளாகச் சித்தரிக்கப் படுவோம்!

ஆனல் சென்ற புதனன்று இமாலய எல்லையில் லடாக் நாட்டில் நடந்த சம்பவம் யார் என்ன சமாதானம் கூறினலும் கண்டிக்கப பட வேண்டியதாகும்.

இந்திய எல்[illegible]க்குள் நாற் ப[illegible]ல்கள் உள்ளேஇருந்த வ[illegible]ம் [illegible]வல் காத்துக் கொண்டிருந்த, நமதுகாவந்து படையினரின் மீது குண்டு வீசிஇருக்கின்றனர் சமாதனத்திற்கு வெண் புருபறக்கவிடும் சைனுக் காரர்கள். அந்தக் குண்டு வீச்சில் பலியானேர் ஒன்பது வீரர்கள். காயப்பட்டு கைதாக்கப் பட்டுள்ளோர் பத்து பேர்! இந்த செப்தி கேட்டு தாய் நாட்டின் மீது பற்றும், உலக அரசியலில் தர்மத்தையும் எதிர்நோக்கும் எவனும் சும்மா இருக்க முடியாது. நாட்டின் எல்லைக் கோட்டை பாதுகாக்கும் படையினரில் பத்து பேர் சைனுவின் கொட்டடியிலே கடடிப் போட்டு வைக்கப் பட்டிருக்கின்றனர் என்பதை நினைக்கும்போதே நெஞ்சு வேகுகிறது.

இமாலய சிகரத்தில் மனித சஞ்சாரமே கிடையாது. எந்த நேரத்திலும் பனிமூடி கிடக்கும் அந்தப் பகுதிகளில் பல நூறு மைல்களுக்கிடையில் இருக்கும் சிறு சிறு பள்ளத்தாக்குகளில் ஒரு சில விரல் விட்டு எண்ணக்கூடிய மலை வாசிகள் வாழ்கின்றனர். நாகரீக உலகிற்கும் இவர்களுக்கும் தொடர்பு கிடையாது. இவர்களில் பெரும்பாலோர் மங்கோலிய இனத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் பின் பற்றும் மதம் பௌத்தம், ஹிந்து ஆகியவையாகும். ஆனல் பழக்க வழக்கங்களோ வெளி உலகிற்கு கொஞ்சம் கூட சம்பந்தமில்லாதவை. மலை வாழ்க்கைக்கு ஏற்ற வண்ணம் அமைந்திருக்கின்றன. பொதுவாக இமாலய இராஜ்ஜியங்களில் படித்தவர்கள் மிகக் கொஞ்சம், இப்படிப்பட்ட மக்களைக் கொண்ட இமாலயத்தில் இன்று எல்லைத் தகராறு எழும்பி இருக்கிறது.

திபெத்நாட்டைக் கைப் பற்றிய சைனு. அங்கிருந்த வண்ணம் இமாலயத்தின் மீது வசதியாகதன் துருப்புக்களை அனுப்புகிறது. மலை உச்சியில் நமது எல்லைக்கோடு இருக்கிறது என்று தெரிந்து கொண்டும், அதைக் காவந்து செய்ய திறமை கொண்ட படையைப் பழக்காத காரணத்தால், வேகமாக முன்னேறி வரும் சீனப் படையைத் தடுக்க முடியவில்லை, நேரு சர்க்காரால். அது மாத்திரமில்லை. சுமார் ஐம்பதாயிரம் மைல் சுற்றளவு கொண்ட மலைத் தொடர்களை சீனு ஆக்கிரமித்து ஆறுமாதங்களுக்கு பின்தான், அந்தச் செய்தியே நமது சர்க்காருக்குத் தெரியும்!

அந்தளவு போக்குவரத்து, தொலைபேசி வசதிகள் குறைவான நிலையில். நம் எல்லையைப் பாதுகாக்கிறது, டில்லி சர்க்கார். இப்பொழுது நடந்த லடாக் சம்பவம் கூட, அது நடந்த ஆறு நாட்களுக்குப்பின் அதுவும் சீனு கொடுத்த செய்தி மூலம்தான் டில்லிக்குத் தெரியும்!

ஒன்பது பேர்களைச் சுட்டுக் கொன்று, அவர்களைப் புதைத்து விட்டு. வேண்டுமானல் அப்பிணங்களை தோண்டி எடுத்து அனுப்புகிறேம் என்று செய்தி அனுப்புகிறது சீனு!

எல்லைத் தகராறு எப்படித் தீரும், எப்படித் திர்க்கப்பட வேண்டும் என்பதை நாட்டின் நவ்வாழ்விலும், உலக சமாதானத்திலும் அக்கரை கொண்டவர்கள் யாரும் சிந்திக்காமல் இருக்க முடியாது. அதுவும் கம்யூனிச நாட்டோடு மோதுதல் ஏற்படும்போது. கொஞ்சம் அவசரமாகவே சிந்திக்க வேண்டும். காரணம், எதிர்த்துப் பேசாத ஒருமித்த எண்ணம் கொண்டு சர்வாதிகார ஆட்சியைத தட்டிக் கேட்க அந்த நாட்டிலே ஆட்கள் கிடையாது. ஆகவே நினைத்த மாத்திரததில் நேரடி நடவடிக்கையில் இறங்கிவிடுவர். சீனுக்காரர்கள். ஜனநாயக நாடுகளுக்கில்லாத சௌகரியம் சைனுவிற்கு உண்டு.

எல்லைத் தகராறைப்பற்றி சிந்திக்கும்போது, சென்ற பத்து ஆண்டுகளாக நடந்த நிகழ்ச்சிகள் நம் கண்முன் வருகின்றன. "இந்தோ சைனு பாய் – பாய்" என்றுநமக்கெல்லாம் சௌ–என்லாய் அறிமுகப்படுத்தப்பட்டார். சீனக் கம்யூனிசமே தனியானதொரு பாதையில் வகுக்கப்பட்

(7–ம் பக்கம் பார்க்க)

உணர்வு மாலை!

[11-8-'59 அன்று சென்னை கிறித்தவக்கல்லூரி தூயதாமசு விடுதி பாரதி மன்றத்தின் ஆருவது ஆண்டுத் துவக்கவிழா திருமதி. எஸ். விஜயலட்சுமி எம்.ஏ.எம்.லிட். அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தோழர் கே. ஏ. மதியழகன் துவக்க உரை ஆற்றினார். அந்த சொற்பொழிவினை செவி மடுத்த, அதே கல்லூரி பீ. ஏ. வகுப்பு மாணவர் 'கீரன்' அவர்கள் மதியழகன் அவர்களின் உரையையும் உற்ற உணர்வையும் கவிதையாகத் தொடுத்து இந்த 'உணர்வு மாலை'யை புனைந்துள்ளார்.]

மதியழகன் சொற்பொழிவு :

கவினுர் ரோசா மலரைக் காணில்
புவியில் பலர்க்கும் புத்துணர் வெழும்பல!
தலைவர்க்குச் சூட்டத் தகவுடைத் தென்றே
நிலையாய்ச் செயலர் நினைப்பார் உண்மை!
கவிஞர் காணில் கன்னி ஒருவளின்
குவியிதழ் தனக்கும் குலவெழில் நுதற்கும்
உவமை காட்டி உயர்கவி யாப்பார்!
ஓவியர் மங்கை ஒளிர்மேனி தன்னைத்
தூவியால் அதன்நிறம் துலங்கிடத் தீட்டுவார்!
பக்தன் பரமனுக்குப் படைக்க நினைப்பான்!

தோட்டக் காரன் தொடர்ந்து முயன்றே
ஊற்றி வியர்வை உயிரென வளர்த்தே
மடலவிழ் மலரின் வண்ணங் காட்டி
உடலுறு குருதி ஊட்டினேன் என்பான்!
அருகுறும் அவனது தங்கை கண்டால்,
இருமலர் பரித்தவள் இருங்குழல் அணிந்து,
மணந்தோன் மனவறை உவப்பொளி மல்கத்
துணிந்திடத் தயங்காள்; சூடி மகிழ்வாள்!
வரலாற் றறிஞர் மனத்தெழு உணர்வோ
அரசரில் அந்நாள் இங்கிலாந்து நாட்டில்

வெண்மலர் ஒருவரும், செம்மலர் ஒருவரும்
கொண்டு பொருதமை குமிழ்த்தலும் உறலாம்!
தத்துவங் கூறும் சான்றோர் காணில்,
எத்தனை மென்மை! எத்தனை எழிலே!
என்றே மயங்கி இருக்கும் மக்களை,
"நன்றவர் உணரார் நறுமண மலர்ப்பின்
குத்திக் கிழிக்கும் கொடுமுள் உள்ளதை!
இத்திற முடைத்தே இல்லற வாழ்வும்!
இன்பம் எல்லாம் இன்பம் அன்றே!
துன்பம் பின்னுல் தொடரும்!" என்ப!

இப்படி யாக இவ்வமை தன்னில்
ஒப்பிலாக் கருத்துக்கள் ஊட்டி வளர்ப்பிரே!
அம்மையார் தலைமையில் அவையிது கூடுதல்
செம்மை யாகும்; சிறப்புடன் "பாரதி
மன்றம்" என்ற வளம் திகழ் பெயரைப்
பொன்ருப் பெற்றியில் பூண்டுள தாலே,
பாரதி யந்நாள் பாவையர் தமக்குச்
சீரெலாம் திகழத் திட்டங்கள் தீட்டச்
சட்டங்கள் சமைக்கத் தகுநிலை விழைந்தமை
கிட்டிய வகையால் கிளர்ந்ததென் உணர்வே!

சங்கத் தமிழே தங்கத் தமிழாம்!
பொங்கிய உணர்வுகள் போற்றினர் அவர்கள்!
வரலா றில்லா வாழ்வின ரெனினும்,
பிறநாட் டறிஞர் பேசி யுள்ளனர்!
மயில்கள் கிரேக்க மண்ணில் உலவின!
சேரர் தேக்கு சென்றது பாபிலோன்!
பாரில் படர்ந்த வணிகர் தம்நிழல்
சீனப் பெருமதில் நிழல்தனில் சேர்ந்தது!
வானம் உறழ்ந்து மணமிகக் கமழ்ந்து
தரணியெல்லாம் சென்றது தமிழர் சந்தனம்!

பரவிய கடலில் பலபெரும் இன்னல்
அமைந்துள தென்றே அவனியில் உள்ளோர்
குமைந்துள நாளில் குவலயஞ் சுற்றி
மிதவை விட்டனர் வீரத் தமிழர்!
இதனை எல்லாம் ஏற்கும் முறையில்,
சான்றுகள் பலவே தருதலும் இயலும்!
ஆன்ரோர் பலரும் அகத்துறை பற்றி
வரைந்துள படங்கள் வளத்தினைக் காட்டும்!
கரந்துறை காதலர் தனிவழிச் செலுங்கால்,
அன்னையள் தேடி அலைந்திடும் பொழுதில்,

தன்னெதிரப் பட்ட சான்ருேர் ஒருவர்,
"ஆழ்கடல் பிறந்த அரும்பெறல் முத்தும்,
யாழ்தனிற் பிறந்த இணையில் இசையும்
மலையிடைப் பிறந்த சந்தன மணமும்
உலகவர் துய்த்தே உதவத்தற்" கென்றே
கலித்தொகை கவினுறச் சொன்னதைக் காண்
மணவினை முடிந்த மங்கை நல்லாள் [கிருேம்!
கணவ னேடும் கவின்பொழில் அடைய,
அவனும் அவளைக் கைப்பற்றி யிழுக்கக்
கவிதலை யுடனே காரிகை பிரிந்தாள்

காரணம் விளங்காக் காளை கேட்கக்
காரிருட் குழலள் கழறுவள் காண்மின் :
"முன்னொரு நாளில் புன்னை விதைகளை
நுண்மணல் பதித்து நுகர்த்திட இன்பம்
விளையாடி வந்தேன்; விதைகளில் ஒன்று
முளைவிட் டெழுந்து கிளைகள் படர்ந்தன!
என்னருந் தாயள் எனக்குத் தங்கை
இன்மையைப் போக்க, "இளமரம் இதுவே
நின்னருந் தங்கையாய் நினைத்துக்கொள்" ளெனச்
சொன்னதால் இம்மரம் என்னுயிர்த் தங்கையே!

தங்கை முன்னர் எங்கைப் பற்றல்
இங்கெனை இப்படி நடக்கச் செய்த"தென
நங்கையள் நவின்றதாய் நற்றிணை எனும்நூல்
செங்கவின் படமாய்த் தீட்டும் காண்மின்!
அற்றை நாளின் அமைப்புடன் இந்நாள்
பற்றிறக் குற்[illegible]ல்கிய நிலையை
ஒப்பிட்[illegible]ய்ந்தா[illegible] உயர்வு துலங்கும்!
இப்பெருஞ் சங்க இலக்கியம் அடுத்துப்
புன்மை மலிந்தது புராணம் எழுந்ததால்!
மன்னுமிவ் வுலகில் வாழும் வாழ்க்கை,

சினிமாவில் திகழும் இடைவேளை போல்வதாய்
நனிமிகப் புனைந்து நவின்றனர், பட்டினத்(து)
அடிகளும் தாயு மானவரும் காண்மின!
......................................இவர்பின்
பாரதி கூறின பார்க்கும் பொழுது
பேரரும் அறிஞர் பிளாடோ போன்ருேர்
சொல்லிய கருத்துக்கள் தொன்மைய தெனுமல்
நல்லருங் கருத்தாம் நந்தாதென்றும்
திகழ்வதாய்த் தலைவர் பேசியது இயையப்
புகழ்மிக உடைத்தாய்ப் பொலிதல் காண்போம்!

இராமாயணம் ஒன்றை யாத்தன னல்லன்!
புராணம் ஒன்றைப் புனைந்தனன் அல்லன்!
பாரதி பாடிய பாக்களைக் காணில்,
நாட்டோர் நலனை நாடிப் பலவாம்
பாட்டுகள் பாடி உணர்வினை ஊட்டினுன்!
லாலா லஜபதி ராயைப் பற்றியும்,
நாலா வகையாம் நாடுகள் பற்றியும்,
கவிதையில் போற்றிக் காட்டினுன் நன்றே!
அழியாத் தன்மையில் ஆக்கல் வேண்டின்,
வாழ்விலும் மனத்திலும் பீறிடும் உணர்வை

வீழ்வுரு விதத்தில் விளம்புதல் வேண்டுமென
அமெரிக்க நாட்டின் அறிஞர் விட்மனும்,
உருசிய நாட்டின் உயர்கவி புஷ்கினும்
சொன்னமை கண்டு துணிவு கொள்மின்!
இன்னதற் இலக்கிய மாக இலங்கத்
தமிழில் தகுந்த திருப்பம் சமைத்த
தனிக்கவி பாரதி தனைப்போல் மன்றில்
பல்வகை யறிவும் பரப்பி,
வெல்கவென வாழ்த்தி விரிவுரை முடிப்பனே!

மலர் 1] [இதழ் 41

காவிரிவட்ட எண்ணெய் !

★ நெய்வேலி நிலக்கரி–
★ சேலம் இரும்பு–
★ காவிரிவட்ட எண்ணெய்–
★ பரம்பிக்குளம் தண்ணீர்–

'இவைகள் செயல்பட தி. மு. க. அபேட்சகர்களுக்கு வாக்களியுங்கள்' என்ற வண்ண சுவரொட்டிகள், கடந்த பொதுத் தேர்தலின்போது. தமிழகமெங்கும், காட்சிதந்தது. அதைக்கண்ணுற்ற காங்கிரஸ் கனதனவான்கள் கேலியும். கிண்டலும் செய்தார்கள், அதில் புதைந்துள்ள பொருளை உணராமல். அந்த இழிமொழிகள் நமது நினைவு திரையிலிருந்து அகலுவதற்கு முன், மதுரையில் கனம் பக்தவச்சலனார் 'சென்னை ராஜ்ஜியத்தில் காவேரி பிராந்தியத்தில், எண்ணெய் சுத்திகரிப்பு சாலையை தொடங்குவதற்கான சாத்தியக் கூறுகள் சிறப்பாக இருக்கிறது' என்று திருவாய் மலர்ந்தருளியுள்ளார். இந்த ஞானோதயம், அவர் வடஇந்தியாவில் பிரயாணம் செய்தப்போது, நிபுணர்கள் கூறியதால் ஏற்பட்டதாம். நாம் ஊரறிய கூவிய நேரத்தில் அவரின் காதுகளின் கர்ண பேரிகைகள் அடைப்பட்டுப் போயிருந்ததுப்போலும் !

காவேரிப் பகுதியில் மேற்கொண்டு எண்ணெய் வளத்தைப்பயன் படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளைப்பற்றி அரசாங்கம் ஆலோசிக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார்! சரிதம் பாடும் காவேரியின் கரையில் உள்ள வளத்தால், தமிழகம் தழைத்தோங்கும் வழிவகைகள் செய்யப் படுமென்று அவரால் திட்டவட்டமாகக் கூற முடியவில்லை; 'அரசாங்கம் யோசிக்கும்' என்று இழுத்தாற்போல் கூறியதற்குக்காரணம், எந்த திட்டத்தையும், சென்னை அரசாங்கம் தன்னிச்சையாக செயல் படுத்தமுடியாது, மத்தியபேரசின் மனம் இரங்காமல். ஆகவேதான் பக்தவச்சலனார் பரிதாபமாக இந்த பல்லவியை பாடியிருக்கிறார். டில்லி தேவதைகளோ, வடநாடு மேன்மேலும் வளம்பெறும் வழிவகைகள் செய்யும் தீவிரப்பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள். தேய்ந்துப்போன தென்னகம் உன்னதமான வளர்ச்சி அடைவதில் அவர்கள் அக்கரை காட்டுவதில்லை. கடந்த பனிரெண்டாண்டின் சரித்திரத்தைப் புரட்டினால் இது தெள்ளனப் புரியும்.

புகை கக்கும் ஆலைகள் – வகை வகையான தொழிற்சாலைகள் – நீண்ட மலைத்தொடர் போன்ற அணைக்கட்டுகள் வரண்ட பாலைவனத்தில் சோலைகள் – புதிய, புதிய சாலைகள் எல்லாம் வடநாட்டு பூமியில் நாள்தோறும் எழுந்த வண்ணமிருக்கிறது. தமிழக பூமியில் இத்தகைய வளர்ச்சிஇல்லை என்பதை சாமன்னிய அறிவு படைத்தவன் கூட புரிந்துக் கொள்வான்.

கோசி அணைக்கட்டு, கொய்னா அணைக்கட்டு, சாம்பல் அணைக்கட்டு, என்று அணைக்கட்டுகளின் பட்டியல் நீண்டுக் கொண்டே இருக்கிறது வட சீமையில்! தென் சீமையில் இதற்கு ஈடான ஒரு அணைக்கட்டைக் காட்டமுடியுமா?

ரூர்கேலா - பிலாயி - துர்காபூர் - ஆகிய இடங்களில் பெரும் தொழிற்சாலைகள் எழுப்பியுள்ளன. மற்றும் ஹாதியா போபால் – ரீகாண்ட் போன்ற பிரதேசங்களில் புதிய தொழிற் நிறுவனங்களை நிர்மாணிக்கத் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளது.

இதற்கு ஈடாக தென்னகத்தில் ஏதாவது ஒன்றை சுட்டிக் காட்ட முடியுமா?

சேலத்திலே இரும்பு – நெய்வேலியிலே நிலக்கரி – இந்த இரண்டும் இணைந்தால் தமிழகம் இன்ப பூமியாக காட்சிதரும். இங்கு தொழிற்சாலைகள் அமைப்பதற்கு சென்னை அமைசசர்கள் விரும்பினாலும், டில்லி 'வேந்தர்களின்' மனம் இளகாத காரணத்தால், எந்தவித தொழிற்சாலையையும் நிர்மாணிக்க முடியவில்லை. 'நெய்வேலி' இல்லையா? என்பார்கள். அங்கு அமைக்கப் பட்டுள்ள தொழிற்சாலை நெய்வேலியில் உள்ள கனப் பொருளுக்கு போதுமானதல்ல. இந்த 'ஆரம்ப நிலை' யைப் பெறுவதற்கு பக்தவச்சலம் டில்லிக்கு ஆலாய் பறந்ததை யாரும் மறந்திருக்க முடியாது !

நம் நாட்டு வளத்தைக் கொண்டு, நாம்தரும் வரிபணத்தைப் பெற்று, வடநாட்டுச் சர்க்கார் நம்மை வஞ்சித்துவிட்டு வாழ்வளிக்கும் பெரும் திட்டங்களையெல்லாம் வட நாட்டில் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது !

ஏற்கனவே உள்ள தொழிற்சாலைகள் போதாதன்று, இன்னும் பலதிட்டங்கள் தீட்டப்பட்டு வருகின்றன.

இந்த நேரத்தில், பெரிய நகரங்களில் புதிய தொழிற்சாலைகள் நிறுவத்தடை விதிக்க வடநாட்டு சர்க்கார் திட்டம் தீட்டியிருப்பதாக சேதி வந்துள்ளது. இந்த உத்தேச ஏற்பாட்டில், கோவை, கல்கத்தா, பம்பாய், பெங்களூர், டில்லி, கான்பூர், ஆகிய நகரங்களில் புதிய தொழிற்சாலைகள் நிறுவுவதற்கு தடைவிதிக்கப்படுமாம்.

பம்பாய், கல்கத்தா ஆகிய நகரங்களில் உள்ள தொழிற்சாலைகள் கக்கும் புகை வானமண்டத்தையே கருமையாககுகிறது. அவ்வளவு தொழிற்சாலைகள் அங்கே, அத்துடன் பெங்களூரையும், கோவையையும் இணைத்துள்ளது நம்மை திடுக்கிட வைக்கிறது,

கோவை மாநகரில் ஐம்பதற்கு குறைவாகவே நூற்பு ஆலைகள் உள்ளன. பெங்களூரில் இன்னமும்குறைவு. அப்படி இருக்க நானூறுக்கும் மேற்பட்ட ஆலைகள் நிரம்பிய பம்பாய் கல்கத்தா ஆகிய நகரங்களுடன், கோவையையும், பெங்களூரையும் இணைத்துள்ளது, தென்னகத்திலுள்ள இந்த இரண்டு கண்களையும் குருடாக்கிவிட வேண்டும் என்ற எண்ணத்தை தவிர வேறு காரணம் ஏதாவது இருகக முடியுமா? மேன்மேலும் தென்னகத்தை வஞ்சிக்க வேண்டுமென்று நஞ்சு மனம் படைத்தோர் திட்டங்கள் தீட்டுசின்றனர். இந்த 'நல்ல சமயத்தில்' தான் பக்தவத்சலனார் காவிரி வட்டத்தில் எண்ணெய் சுத்தரிப்புசாலையை ஏற்படுத்த அரசாங்கம் யோசிக்கிறதென்று மார்தட்டிப் பேசியிருக்கிறா, நெய்வேலி பூர்ணத்துவம் பெறவில்லை. சேலத்தின் இரும்பு பூமிக்கடியில் உறங்குகிறது. பரம்பிக்குளம் தண்ணீர் ஆண்டாடுக் காலமாக அராபிக்கடலில் கலந்துக் கொண்டிருக்கிறது ! இவைகளுக்கெல்லாம் வழிவகை காணமுடியாதவர்கள்தான் கூறுகிறார்கள், சலசல என சிந்துபாடும் காவேரிக் கரையில் எண்ணெய் எடுக்கப் போவதாக !

எத்தனையோ தொழிற்சாலைகள் இத்தென்னாட்டில் ஏற்படுத்தவதற்கான வாய்ப்புகள் இருந்தும், இங்கு எந்தத் தொழிற்சாலையையும் ஏற்படுத்தும் எண்ணம் இந்திய பேரரசுக்கில்லை. இங்குள்ளோரின் கண்துடைப்பிற்காக ஏதோ சில சிறிய தொழிற்சாலைகளை நிறுவ திட்டங்கள் தீட்டப் பட்டாலும் அவைகளை சரிவர செயல் படுத்துவதில் தாமதம் செய்து வருகிறார்கள் வடநாட்டு ஆளவந்தார்கள் ! பக்தவச்சலாரின் ஆசையும் இந்த 'கதி' யைதான் அடையும் என்று நாம் சொல்லத் தேவைஇல்லை !

எனவேதான் நாம் நம்மை வஞ்சிக்கின்ற வடநாட்டு பிடியிலிருந்து, பிரிந்து புதியதோர் சுதந்திர ராஜ்யத்தை இன்ப திராவிடத்தை–அமைக்கப்பாடுப்பட வாரீர் என்றுபக்தவச்சலனார் போன்றவர்களுக்கு அன்பழைப்பு விடுகிறோம் ! ஏக பாரதப் போர்வையில் பதுங்கியுள்ள பக்தவச்சலனாரின் காதில் நமது குரல் ஒலி கேட்காதது போல் பாவனை செய்கிறார்கள்.

தமிழகத்திலேயே பெரிய நீர்ப்பாசனத் திட்டம் என்று இவர்கள் வருகிற நாட்களில் பாராட்டம்போகும் பரடபிக்குளம் திட்டத்திற்கு இப்போதுதான் கால்கோல்விழா நடைபெறுகிறது.

சிந்திரி எரு, காவிரி மண்ணிலும் நீரிலும் கலந்து நெடு நாட்களாய் விட்டன. நேற்றுத்தான், நெய்வேலியில் இரசாயன எரு உற்பத்திசாலை அமைக்க, இத்தாலிய. ஜெர்மனி நிறுவனங்களுடன் கையெழுத்திடுகிறார்கள்.

நேருவின் எழுபதாவது பிறந்ததின விழாவைக்கொண்டாடுவதில் காங்கிரசார் தீவிரம்காட்டுகின்றனர். காவிரிவட்ட எண்ணெய் பூமியின் கர்ப்பத்திலிருந்து விடுதலை பெறும்நாளை நினைத்தால் நம் கண்களில் நீர் சொட்டுகிறது.

முத்து வேலப்பர் மகள் வள்ளிநாயகி!

K.A.மதியழகன்

3

“சென்னி மலைக்கும் சிவன் மலைக்கும் நடுவில்உள்ள சின்னமலை வாங்கிக் கொண்ட தாகச்சொல்.”

—இந்த வாசகங்கள் கொங்கு நாட்டின் மூலை முடுக்கெல்லாம் பரவி விட்டது.

வேலா மரத்தடியிலே, குழுமியிருந்த மாட்டுக்காரச் சிறுவர்கள் பேசினார்கள்.

விறகொடிக்கும் வயோதிக தாய்மார்கள் குசுகுசுவென்றுப் பேசிக் கொண்டார்கள்.

கவலையிறைக்கும் கட்டிளைஞனும், களத்துமேட்டில் தாம் படித்த வாலிபனும் இந்த சம்பவத்தையே சிந்தித்துக் கொண்டிருந்தார்கள்,

ஊர் கிணறுகளிலே நீரெடுத்து வரும் குமரிப் பெண்களின் வளை குலுங்கும் கரங்கள் ஒலித்த நேரத்தில், தண்ணீர் தடத்தில் ‘சின்னமலை வாங்கிக் கொண்ட தாகச் சொல்’’ என்று கூறினாராமேடி, ஊரிலேதான் இத்தனை ஆண் பிள்ளைகள் இருக்கிறார்கள். எவருக்கு வந்ததடி அந்த தைரியம்! என்றாள் ஒருத்தி.

“எனக்கு அப்போதே தெரியும். அன்றைக்கு தீர்த்தகிரி தடத்தில் குதிரையின் மீது போகும்போது விழுங்கி விடுபவள்போல் பார்த்துக்கொண்டிருந்தாள். திருடி! இப்போது புரிந்து விட்டது. தீர்த்தகிரியை புகழ்வதிலே அவளுக்கு எவ்வளவு துடிப்பு’’ என்று கிண்டல் செய்தாள் வேறோர் குறும்புக்காரி.

சங்ககிரிக் கோட்டையானின் ஆளிடம் என்ன இருந்தாலும் தம்பி இவ்வளவு வேகமாக நடந்துக்கொண்டிருக்கக் கூடாது. எங்களுக்கெல்லாம் தெரியாதா என்ன? மைசூரானுக்கு கட்டுப்பட்டு நடப்பது எங்களுக்கு ஒன்றும் கரும்புபாகல்ல! என்ன செய்வது? ஆள், அம்பு, கோட்டை, கொத்தளம் அவனிடம்! அரண்மனைக்கு எதிர் மனையா? என்ன நேரப் போகிறதோ, எந்ததோட்டத்தின் பயிர்களை மாடுகளை விரட்டி பாழ்படுத்தப்போகிறார்களோ, தீர்த்தகிரியோட வா முடிந்துவிடும். யார்யாரை தீர்த்துக் கட்டப் போகிறதோ, நாசம் தலைவாசலிலே நிற்கிறது. நாலுபேர்போல நாமும் போனாலென்ன என்று இருந்துவிட்டிருக்கக் கூடாதா? ஊராருக்கு இல்லாத அக்கரை இவனுக்கு மட்டும் என்ன வந்து விட்டது! என்னசெய்வது! தினை விதைத்தவர் சோளத்தையா அறுக்க முடியும்’’ என்று வயோதிகத்தையும், சலிப்பையும் குழைத்துப் பேசினார், சுடுகாட்டில் ஒருகாலையும் வீட்டுத் திண்ணையில் ஒரு காலையும்வைத்துக்கொண்டிருந்த நரைத்த கிழவர்கள்.

நொய்யலாற்றங்கரை மேட்டிலே குதிரையை நிறுத்திவிட்டு வேப்பங்குச்சியால் பல் துலக்கிக் கொண்டிருந்தான் தீர்த்தகிரி.

நுரைதள்ள குதிரையைவிட வேகமாக ஓடிவந்தான் ஒரு சிறுவன். தீர்த்தகிரிமுன்னாலேவிழுந்தான். மேல்மூச்சு, கீழ் மூச்சு வாங்கியது. “அண்ணா! வடக்கேயிருந்து பட்டாளம் வருகிறது. பனங்குலை வெட்டிக் கொண்டிருந்தேன். பார்த்ததும் ஓடோடி வந்தேன்’’ என்று சொல்லி விட்டு மீண்டும் மூச்சு வாங்கினான்.

தீர்த்தகிரி குதிரையில் ஏறி விரைந்தா[illegible]. உடன்பிறந்தோர் தயாராயினர். ஆற்[illegible] வடகரையிலேயே [illegible]ங்ககிரிக் கோட்டையானின் படையை சந்தித்தான்! எனினும் தீர்த்தகிரிக்கு துணைபுரிய கொஞ்சம் ஆட்கள் தான் இருந்தனர்.

தீர்த்தகிரியையும் அவன் தோழர்களையும் கைதாக்கிச் செல்லத்தான் சங்ககிரியானின் சேனை வந்திருந்தது.

இன்னும் சில மணி நேரத்தில் சின்னமலை ஓய்ந்து விடுவான். சங்ககிரிக் கோட்டை அதிகாரி முன்பு இந்த ‘கூண்டுப்புலியை’ நிறுத்துவோம் என்று எக்காளம் கொண்டது எதிரிப்படை. தீர்த்தகிரிக்கும் நிலைமை விளங்கிவிட்டது.

சூரியன் நாலுபனை உயரத்திற்குமேல் போய்விட்டான். திடீரென்று களத்தில் ஒரு மாறுதல். சங்ககிரிக்காரனுக்கும் புரியவில்லை. தீர்த்தகிரிக்கும் வியப்பாக இருந்தது. நூறு பேர் கொண்ட ஓர் படை களத்தில் நுழைந்தது.

அந்த ஆட்கள் தீர்த்தகிரி பக்கம் போரிட்டனர். சங்ககிரிப் படையின் அணிகுலைய ஆரம்பித்தது. தீர்த்தகிரியை கைதுசெய்ய முடியாது என்பது தெளிவாகத் தெரிந்துவிட்டது. இன்னும் சில மணி நேரம் கழிந்தால் நொய்யல் மணல் படுகையில் அனாதைப் பிணங்களாக கழுகும், காகமும் கொத்தித் தின்னும் நிலை பிறந்துவிடும்: என்பதை படையை நடத்திவந்த தலைவன் ஊகித்து விட்டான். படை பின்னோக்கி பறந்தது.

தீர்த்தகிரியும் பெரிய தம்பியும் கிலேதாரும் உதவி புரிந்த ஆட்களை நன்றியறிதலோடு பார்த்தனர்.

“நீங்கள் இல்லாவிட்டால் கொங்கு நாட்டு மண்ணுக்கே அபகீர்த்தி சூழ்ந்திருக்கும். உங்கள் உதவி காலத்தினால் பெரியது, எதிர்பாராதது. கேட்டுப் பெறாதது! எங்கிருந்து வந்தீர்கள்? ஏன் உதவினீர்கள்? எப்படி தெரியும் இந்த ஆபத்து’’ என்று மளமளவென்று அடுக்கிக்கொண்டே போனான் தீர்த்தகிரி.

சுடர்விடும் கண்களும், தொங்கிக் கொண்டிருந்த அடர்ந்த கேசமுமுடைய சுந்தரமானவாலிபன் ஒருவன் ஆட்களைக் கிழித்துக் கொண்டுவந்து சொன்னான்:

“அண்ணா! நாங்கள் சென்னிமலை முத்து வேலப்பகவுண்டரின் ஆட்கள். எங்கள் ‘அய்யா’ நெடு நாட்களாகவே உங்களை கூர்ந்து கவனித்துக் கொண்டு வருகிறார். உங்களால் கொங்கு மண்டலம் புதிய புகழ் பெறப் போகிறது என்று அடிக்கடி கூறுவார். அப்போதெல்லாம் அவர் கண்களிலே ஓர்புதிய ஒளி மின்னும். மேலப்பாளையம் தம்பிதான் நம்மவரின் நம்பிக்கை நட்சத்திரம் என்பார். சங்ககிரிக் கோட்டை ஆளிடம் வரிப் பணத்தை எடுத்துக் கொண்டீர்கள் என்ற சேதி கேட்டவுடன் செந்தேன் வார்த்ததுபோல் இருக்கிறது என்று துள்ளிக் குதித்தார். வேங்கைக் காட்டில் இனி நரியாட்சிக்கு இடமில்லை என்று கர்ஜித்தார். தம்பிக்கு எந்த நேரமும் ஆபத்து நேரலாம். நமது பணியும் சிறு உதவியாய் இருக்கும் ஆயத்தமாய் இருங்கள் என்று எங்களை எச்சரித்தார். அவைகளனைத்தும் நடந்தது. சங்ககிரிப்படை தங்கள் மீது பாய புறப்பட்டுவிட்டது என்று தகவல் தெரிந்தது. புயலென வந்தோம். அய்யாவின் ஆணையை நிறைவேற்றியதில் எங்களுக்கு ஆனந்தம். மிகவும் புகழ்ந்து விட்டீர்கள், நாங்கள் வருகிறோம். அய்யாவிடம் சென்று விபரம் கூற வேண்டும்’ என்றான்.

“நல்லது, நண்பர்களே! நாளை நண்பகல் நானே வந்து

முத்து வேலப்பரிடம் நேரில் நன்றி கூறுகிறேன்'' என்றான் தீர்த்தகிரி.

சென்னிமலை முத்து வேலப்ப கவுண்டரின் மாளிகை அன்று புதிய சோபை பெற்று விளங்கியது. பெண்பார்க்க வரும் மாப்பிள்ளையை வரவேற்கும் பரபரப்பு தென்பட்டது.

மாளிகை கூடத்தில், தான் வளர்க்கும் வண்ணப் புருக்களுக்கு தீனி இறைத்துக் கொண்டிருந்தாள் முத்துவேலப்பரின் ஒரே செல்வ மகள் வள்ளி நாயகி.

''என்னம்மா! வள்ளி! விருந்தினர் வரும் நேரமாயிற்று, தலைவாரி நமது தோட்டத்து ரோஜாவில் இரண்டு சூடிக் கொண்டால் எவ்வளவு அலங்காரமாய் இருக்கும்'' என்றார்.

''என்னப்பா! நான் அழகாக இல்லை என்கிறீர்களா''?

''அப்பாவிப்பெண்ணம்மா நீ'' யார் உனக்கு அழகில்லை என்று சொல்வார்கள். நீ சூடும் ரோஜா மலர் வாயிருந்தால் என்ன இருந்தாலும் வள்ளியின் வதனத்தின் வர்ணம் எனக்கு இல்லையே என்று அரற்றி வருந்தும். அசைந்தாடும் கொடி முல்லை, தினந்தோறும் உன் பல்வரிசையின் வெண்மையை 'இரவல்' கேட்கிறது மகளே! அது வல்லம்மா, நான் சொல்வது. உலக நடை முறைப்படி இல்லா விட்டால் நம்மைப்பற்றி என்ன நினைத்துக் கொள்வார்கள்.''

''என்னப்பா! விருந்தினர் உங்களை பார்க்க வருகிறாரா? என்னை விலைபேச வருகிறாரா?''

''அப்படியெல்லாம் சொல்லாதேம்மா! ஆனூர் குடும்ப சம்பந்தமென்றால்அது கிடைக்காதா என்று அத்தனை ஊர் வேளாளாகளும் தவம் கிடக்கிறார்கள். அதிர்ஷ்டம் உன்னை அணைக்க வரும்போது......''

''அப்பா! என் தந்தை ஆபத்பாந்தவர், அனாதை ரட்சகர், கருணாமூர்த்தி, கைமாறு எதிர்ப்பார்க்காதவர் என்றெல்லாம் எண்ணியிருந்தேன். தீர்த்தகிரிக்கு உதவி போனதில் மகளின் திருமணம் தொக்கியிருக்கிறது. அப்படித்தானே அப்பா, எனக்கு திருமணமே பிடிக்கவில்லை, அதிலும் பெரிய இடத்துச் சம்மந்தமென்றால் வேண்டவே வேண்டாம். ஆனூரிலேயே வேறு சாதாரண குடும்பம் இல்லையா அப்பா! காங்கயம் கால்நடைச் சந்தையில் மயிலை, செவலை, குறியிருக்கிறதா? கோடு இருக்கிறதா? கொம்பு சீவியுள்ளதா? என்று மாடுகளுக்கு காண்பிப்பதுபோல் உங்கள் மகளையும் ஆக்குகிறீர்கள்'' என்றாள்.

''போக்கிரிப்பெண்ணே! என் வாழ்வு சுகம் எல்லாம் உன்...!'' என்றார்.

சென்னிமலை நெடுஞ்சாலையில் ஆரோகணித்துவரும் குதியின் குளம்படிச் சத்தம் கேட்டது.

''சின்னமலை, சின்னமலை'' என்ற சொற்களை எல்லா வாய்களும் முணுமுணுத்தன. தலைவாயிலிலே முத்து வேலப்பர் நின்றார். தீர்த்தகிரி குதிரையிலேயிருந்து இறங்கினான் ''சின்னமலை!'' என்று வாஞ்சை ததும்ப அழைத்தார் முத்து வேலப்பர்.

''நீங்[illegible] கூட [illegible]ன்னமலை என்று அழைக்கிறீர்கள்!''

''வேறுயார் அழைப்பது தம்பி. இன்றுமுதல் சின்னமலை என்பது என் செல்லப்பெயராக செல்வப் பெயராக வழங்கட்டும்'' என்றார்.

தீர்த்தகிரிபுன்னகைபுரிந்தான். கூட்டத்திற்குள் நுழையும்போது தீர்த்தகிரியின் 'மேயும்' கண்கள் கோவில் மதிற்சுவரிலேயிருந்து கோபுர அறைக்கு தாவும் தோகை மயில்போல ஓர் துடியிடை உள்ளே ஓடி மறைவதை பார்த்தன. மீண்டும் அவள் தலை காட்டவே யில்லை.

உணவு முடிந்தது. சூலூர் வெற்றிலையில் சுண்ணாம்பைத் தடவிக்கொண்டே முத்துவேலப்பர் எப்படி துவங்குவது என்று யோசித்துக் கொண்டிருந்தார்.

''நீங்கள் செய்த கைமாறுக்கு நான் நிரம்ப நன்றியுடையவன்''

''கைமாறு அல்ல, சின்னமலை என் கடமை நான் செய்தேன். அவ்வளவுதான் இருந்தாலும் ஒரே ஒரு ஆசை''

''தயக்கமில்லாமல் சொல்லுங்கள் பெரியவரே! சின்னமலை வாக்குறுதியை என்றும் நிறைவேற்றியே தீருவான்''

''பெண்ணைப் பெற்றவர்தயங்காமல் முடியுமா? தங்கள் குடும்பத்தில் திருமணத் தொடர்புக் கொள்ளவேண்டும் என்பது எனது நெடுநாளைய ஆசை. குழந்தை கொடுத்து வைத்தவளாய் இருக்க வேண்டும்''

இதற்கா இவ்வளவு தடுமாற்றம. உங்கள்போன்ற நற்பண்பாளர்களின் இல்லங்களில் எங்களுக்கு உறவுமுறை கிடைக்க வேண்டுமே? ஊர் சென்றதும் தம்பியைக் கலந்துக்கொண்டு விரைவில் பதில் அனுப்புகிறேன்''

குதிரையிலே சென்று கொண்டிருந்த சின்னமலைக்கு எதிர்காலத்தில் நடக்க இருக்கும் திருமணத்தில் மனம் இலயித்திருந்தது. நாதஸ்வரத்திற்கு யாரை ஏற்பாடு செய்வது, புரவி ஆட்டம் வைக்கலாமா? காளைமாட்டு ஜதைகளின் ஊர்வலத்தைச் சேர்க்கலாமா என்பன போன்ற நூறு அம்சங்களை யோசித்தான்.

''பெரிய தம்பி! முக்கிய சேதியுடன் வந்துள்ளேன். எனது வேண்டுகோளை நிறைவேற்ற வேண்டும்''

''சொல்லுங்கள் அண்ணா! புலிப்பாலா, புரவிக் கொம்பா? அலைகடலுக் கப்பால் வையகத்தின் கடைசிக் கோடிக்கு போக வேண்டுமா, அண்ணன் ஆணை அதுவானால்நிறைவேற்றியே தீருவான் தம்பி!''

'வாக்கு அளித்து வந்துள்ளேன். முத்து வேலப்பரின் மகளை நீ திருமணம் செய்து கொள்ள வேண்டும்''

''அண்ணா! அது ஒன்று மட்டும் சொல்லாதீர்கள்திருமணம். நான் திருமணம் செய்து கொள்வதாய் இல்லை''

எதற்கும் மறுமொழி பேசாத பெரிய தம்பி தடை சொல்லியது சின்னமலைக்கு ஆத்திரத்தைக் கிளறியது. ஒன்றும் பதில் பேசவில்லைநேராக அவனதுபடுக்கையறைக்குப் போனான். படுத்து புரண்டான். கண்கள் உறங்கவில்லை.

வெளியே மையிருட்டு. அவனது உள்ளமும் அப்படித்தான் இருந்தது. திடீரென்று சோவென மழைபெய்தது. அவனது ஊமை அழுகைக்கு ஒத்திகைபோல் தோன்றியது.

நள்ளிரவு வேலையாள் ஓடி வந்தான். சின்னமலையிடம் ஓலை ஒன்றைக் கொடுத்தான் என்ன இந்த ஓலை?

தொடரும்



கலைவாணர் பிக்சர்ஸார் தயாரிக்கும் அறிஞர் அண்ணா அவர்கள் தீட்டிய 'கண்ணும் கண்ணும் கலந்தது' என்ற திரைப்படதுவக்கவிழாவில் முன்னாள் நீதிபதி திரு: எஸ். ஏ. அப்பாசாமி அவர்கள் தலைமை வகித்து வாழ்த்துகிறார்.



★ விழாவில் லட்சியநடிகர் எஸ். எஸ். இராஜேந்திரன், கே. ஏ. மதியழகன், முரசொலி மாறன். உடுமலைநாராயணகவி, டைரக்டர் ஆர். எம். கிருஷ்ணசாமி, ஈ. வி. கே. சம்பத், டைரக்டர் ஆர். ஆர். சந்திரன் ஆகியோர்.

முல்லை மடல்

முல்லை.சத்தி

அன்புள்ள சித்ரா,

இரஷியர் ஏவிவிட்ட 'ராக்கெட்' வான மண்டலத்தைக்கிழித்து சந்திர மண்டலத்தை தொட்ட வையகத்தின் வியப்புக்குரியச் செய்தி வெளியானபோது, நீ ஆச்சரியப்பட்டதைவிட, இக்கடிதம் உனக்கு அதிக ஆச்சரியத்தை அளிக்கும். 'சித்தப்ப என்ன திடீரென்று நீண்டதொரு மடலை அனுப்பியிருக்கின்றாரே' என்று உன் இதயம் கேட்கும். அதையும் அறிவேன், கண்ணே!

பெற்ற அன்னையும், உற்ற நல் தோழர்களும், வரையும் கடிதங்களுக்கு, ஏன் என் அன்பை எல்லாம் பெற்ற நீ வரையும் இன்ப ஓலைகளுக்கும், நான் மறு மடல் தீட்டுவதில்லை என்பதையும், 'கடிதம் எழுதவே எனக்கு பிடிப்பதில்லை' என்ற பல்லவியை அடிக்கடிப்பாடி உனக்கு சமாதானம் கூறிவந்த என்னிடமிருந்து, இன்று நீ எதிர்பாராத நேரத்தில், இந்த நீட்டோலை உன்னைத் தேடி ஓடிவருவதைக் காண, உன் உள்ளம் மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கினாலும், ஆச்சரியம், அதைவிட அதிகமாக மிதக்கும், என்பதை நான் அறிவேன்.

கடிதம் எழுதும் கலையை நான் வளர்த்துக்கொள்ளவில்லை. நான் மட்டும் என்ன? தமிழ் இலக்கியத்திலேயே கடிதக் கலை அதிகமாக வளரவில்லை; உரை நடையும், கவிதையும், வளர்ந்த அளவு நாடகமும், கடித இலக்கியமும் நமது தாய் மொழியாம் தமிழில் வளரவில்லை. தற்போது, சலனப்படும் மக்களின் கவனத்தையெல்லாம் காந்தம்போல் நாளுக்குநாள் கவர்ந்து வருவதால், நாடக இலக்கியம், நாளொரு மேனியும், பொழுது ஒரு வண்ணமுமாய், வளர்ந்து வருகிறது. 'கடிதக்கலை' மேலை நாடுகளில் நன்கு வளர்ச்சியுற்றுள்ளது. ஐரோப்பிய எழுத்தாளர்கள் கடித வடிவ கட்டுரைகளை ஏராளமாக எழுதி, கடித இலத்கியத்தின் வளர்ச்சிக்கு பெருந்தொண்டாற்றியுள்ளார்கள்.

'சமுதாய ஒப்பந்தத்தை'த் தந்த ரூசோவை நீ அறிவாயா? கல்லூரி ஏடுகளைப் புரட்டுகின்ற உனக்கு, உலகத்திற்கு அரிய பெரிய கருத்துக்களை வழங்கிய வித்தகர்களைப் பற்றி அறிந்துக்கொள்ள போதுமான அவகாசம் கிடைப்பதில்லை என்பதை அறிவேன். கிடைக்கின்ற காலத்தில், 'கார்டனரையும், அகஸ்தா கிரஸ்டியையும்' படிக்கவே நேரம் சரியாக இருக்கிறதல்லவா? அவர்கள் தானே இக் காலத்து கல்லூரி வாழ்வோரின், வழிபாட்டுக்குரியவர்களாகக் காட்சி அளிக்கிறார்கள்! அவர்களுக்கு நீயும் விதிவிலக்கல்ல என்பது, உன் பீரோவில் நீ வரிசை, வரிசையாக அடுக்கி வைத்துள்ள புத்தகங்களே சாட்சி கூறுகின்றனவே! எதையோ, எழுத எண்ணி, எங்கேயோ போய் விட்டேனே! அந்த ரூசோ — தனது இறுதிக்காலத்தில்வரைந்த 'மலைக்கடிதங்கள்' இன்றும்மேலை நாட்டுஇலக்கியத்தில் சுடர்விட்டு பிரகாசிக்கின்றன.

அமெரிக்கா — பிரெஞ்சு இரண்டு புரட்சிகளையும் நேரில் காணும் வாய்ப்பை மட்டுமல்ல, அதில் உன்னதமான பங்கும் ஏற்ற தாமஸ்பெயின் 'பிரெஞ்சு புரட்சி தீதானது' என்று குற்றம் சுமத்திய பிரபல பேச்சாளரான பர்க்கிற்கு அளித்த பதில்கள் யாவும் கடித வடிவ கட்டுரைகள் தாம்! இப்படி, இன்னும் பலர், கடித இலக்கியத்தை வளர்த்திருக்கிறார்கள் மேற்கத்திய நாடுகளில்! 'கடித இலக்கியம்' என்றவுடன், இந்திய உப கண்டத்தின் பிரதம மந்திரியாக இன்று கொலுவீற்றிருக்கும், நேரு துரை மகனார் தனது மகள் இந்திரா பிரியதரிசனிக்கு வரைந்த — இப்பொழுதல்ல பல ஆண்டுகளுக்கு முன்னால் — கடிதங்கள் நினைவிற்கு வராமல் போகாது! (தற்போது அவர் தனது சக மந்திரிகளுக்கும், தனது கட்சியின் காவலர்களுக்கும் வரையும் லிகிதம் பிற்காலத்தில் கடித இலக்கிய வரிசையில் அமரும் தகுதியைக்கூட பெறக்கூடும்.)

தமிழிலக்கியத்தில், தமிழ் மொழிக்கு பெரும் தொண்டாற்றிய மறைமலையடிகளாரின் 'கோகிலாம்பாள் கடிதங்களும்' அக்கிரகாரத்து அதிசய மனிதரான வ. ரா. வின் 'இராஜ கோபாலன்' கடிதங்களும்' மு. வ. வின் 'அன்னைக்கு' 'தங்கைக்கு' போன்ற நூல்களும், இந் நாட்டின் 'தலை விதியை' நிர்ணயக்கும் மாபெரும் பொறுப்பை ஏற்றுள்ள அறிஞர் அண்ணா அவர்கள் 'திராவிட நாடு' ஏட்டில் தம்பிக்குத் தீட்டி வந்த ஆசியற் கடிதங்களும், குறிப்பிடத் தக்கவைகளாகும். அண்ணா மீண்டும் தனது தம்பிமார்களுக்கு வாரம் ஒருமுறை கடிதம் திட்டுவாரேயாயின், தமிழில் கடித இலக்கியம் இல்லையே என்றகுறை நீங்கும்.

நான் உனக்கு திடீரென்று இந்த முடங்கலை வரைவதின் நோக்கத்தை விளக்க எண்ணி 'கடிதஇலககியத்தின்' வரலாற்றையே தீட்டிவிட்டேன்.

சந்தித்துக்கொள்ள இயலாத இரண்டு உள்ளங்கள் தங்கள் கருத்துக்களைப் பறிமாறிக்கொள்வதற்கான கருவிதான் கடிதம் என்பது. 'நேரில் பேசஇயலாத, வெட்கப்படுகின்ற வைகளைக் கூட கடிதம் மூலம் தெரிவிக்கலாமே?' என்று எனது நண்பர் ஒருவர் நேரில் கூறவில்லை–கடித மூலம் ஒருமுறை எனக்குத்தெரிவித்தார்! அதுபோல், நேரில் உன்னுடன் பேச அவகாசமில்லாமல், எண்ணங்களைபரிமாறிக் கொள்ள இயலாமல் இருக்கும் நான், இக்கடித மூலமாக என் எண்ணங்களை உனக்கு தெரிவிக்கலாம் அல்லவா! அதன் விளைவுதான் இக் கடிதம்.

ஒரு முறை, நமது அழகு கிராமமாம் முல்லையில் உள்ள நமது இல்லத்தின் தாழ்வாரத்தில் அமர்ந்து 'குடும்ப, விவகாரம்' பற்றி சர்ச்சை செய்துக்கொண்டிருந்த நேரத்தில், 'சிற்றப்பா கட்சி இலட்சியம்–என்றெல்லாம் புலம்பிக்கொண்டு ஊர் சுற்றிக் கொண்டிருக்கிறார்' என்று குற்றம் சாட்டினையல்லவா? அப்பொழு[illegible] உனக்கு நான் நேரிடையாக பதில் சொ[illegible]மல் சிரித்துக் கொண்[illegible] எழுந்துச் சென்றது நினைவிருக்கிறதா? நீ தொடுத்த வினவுக்கு நான்பதில் அளிக்காதக்காரணம் அவைகளையெல்லாம் நீ புரிந்துக் கொள்ளும் வயதையும், பக்குவத்தையும் நீ அப்போது பெறவில்லை.

இன்று கல்லூரியிலெ காலெடுத்துவைத்திருக்கிறாய். உலகவரலாற்றைப்புரட்டுகின்றாய். உன்னதத்தத்துவங்களை அளித்துவிட்டுச்சென்ற வித்தகர்களின் எழுத்தோவியங்களை படிக்கிறாய். அதே நேரத்தில் உன்னைச்சுற்றி, நீ ஒரு அங்கமாக இருக்கின்ற உலகத்தில், நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளைப்பற்றி — நீ தெரிந்துக் கொள்ள வேண்டுமல்லவா? அவைகளை உனக்கு தெரிவிக்கவே இந்த முடங்கலை திட்டமுற்பட்டேன்! அவ்வப்போது நான் சார்ந்துள்ள விடுதலை படையைப் பற்றியும் விவரிப்பேன்.

கடந்த பத்து பதினைந்து நாட்களாக, செய்தித்தாள்களிலெல்லாம், கப்பற்படை தளபதிகளில் ஒருவரான நானாவதி கொலைவழக்குச்செய்திகளே நிரம்பிகிடந்தனவல்லவா ' அ[illegible]தசுவாரசியமான சோககதையை, இன்று இந்திய எல்லையில் முகில் மேவும் இமயத்தின் உச்சியில் நடை பெறுகின்ற நிகழ்ச்சிகள் மறக்கடிக்கச் செய்துவிட்டது. 'லடாக்கில்' — இந்திய நாட்டையும் செஞ்சீன நாட்டையும், பிரிக்கின்றஎல்லையில், செஞ்சீனா நடந்துக் கொள்ளுகின்ற விசித்திரமான போக்கை இன்று வையகமே கூர்ந்து நோக்குகின்றது.

பாகிஸ்தானுக்கும் இந்தியநாட்டிற்கும், கடந்த சில மாதங்களாக நடைபெற்றுவந்த 'எல்லைப் போராட்டம்' ஒரு முடிவு கண்ட அதேநாளில், சீன எல்லையில் ஒரு புதிய குழப்பம் ஏற்பட்டிருக்கிறது. இந்தியாவிற்கு சொந்தமான லடாக்கில், காவல் புரிந்துவந்த, இந்திய சிப்பாய்கள் பதினேழுப் பேர் செஞ்சீனா சிப்பாய்களால் கொல்லப் பட்டதாகச் செய்தி வந்தது. ஆனால் இன்று இந்திய சிப்பாய்கள் பத்துப் பேர் பத்திரமாக தங்களது காவலில்இருப்பதாக செஞ்சீனா அறிவித்திருக்கிறது. அது எவ்வளவு தூரம் உண்மையோ! செஞ்சீனாவும் — இந்தியாவும் — இன்று, நேற்றேல்ல. பலநூறு ஆண்டுகளாகவே நல்லதொரு சுமுகமான நிலையில் வாழ்ந்து வருகின்ற நாடுகளாகும். போதி மரத்து உத்தமனின் கொள்கைகளைக் கடைப்பிடிக்கும் சிறப்புப் பெற்ற நாடு. சீனநாடு. பிரதமர் பண்டிதநேருவின் 'பஞ்சசீலக்' கொள்கையையும் ஆதரிக்கும் நாடு. அதுதான் இன்று, துப்பாக்கி ஏந்தி, இந்திய எல்லையில் இரத்தக் களறியை ஏற்படுத்தியிருக்கிறது. உலகத்தின் பல்வேறு நாடுகளும் இந்த அடாத செயலை கண்டித்திருக்கின்றன. எதற்கெடுத்தாலும் செஞ்சீனாவை சாட்சிக்கு அழைக்கும் இந்நாட்டு பொதுஉடமை வாதிகள் கூட இச்செயலை கண்டித்திருக்கிறார்கள். துப்பாக்கியின் துணைக்கொண்டு, இந்தியாவிற்கு சொந்தமான இடத்தை பிடித்துக் கொள்ள செஞ்சீனா முயலுவது, விந்தைதான். இதுவரையில், எல்லையில் காவல் புரிந்துவந்த இடங்களை இந்திய படையின் கையில் ஒப்படைத்து விடவேண்டும் மென்றும், சீனாவின் இந்ததகாதப்போக்கை உடனடியாக, தடுக்கப்படவேண்டும் மென்றும், பலரும் கூறுகின்றார்கள். கத்திக்கு, கத்தி, இரத்தத்திற்கு இரத்தம் என்றும்பேசப்படுகிறது. எல்லையில் இத்தகைய செயல்கள் நடைபெறுவதை முளையிலே கிள்ளி எறியப்படத்தான் வேண்டும்மென்றாலும், அதற்கு துப்பாக்கி ஏந்த தேவையில்லை என்றே நான் கருதுகிறேன். சீனநாட்டு சூன் — என் — லாயும, இந்தியநாட்டு, ஜவஹர்லா[illegible] நேருவும் — சந்தித்து — மன[illegible]

(8-ம் பக்கம் பார்க்க)

பாராட்டுகிறோம்!

சென்னை அரசாங்கம் கடந்த வாரம் கதர் வார விழாவினை முன்னிட்டு, சென்னை நகர் கல்லூரி மாணவர்களுககு ஒரு பேச்சுப்போட்டி நடத்தியது. அதில்சட்டக் கல்லூரிமாணவரும், தி. மா. மு. க. உறுப்பினருமான தோழர். வி. அருணாசலம், பி. ஏ. அவர்கள் முதல் பரிசு பெற்றுள்ளார்கள். நண்பரின் வெற்றிகண்டு மகிழ்கிறோம். பாராட்டுகிறோம். இதனைத் தொடர்ந்து மேலும் பல வெற்றிகள் அவா காண வாழ்த்துகிறோம்.

எல்லைக்கோடு !

(முதல் பக்கத் தொடர்ச்சி)

டிருக்கிறது. அதைக்கண்டு அச்சப்படத் தேவையில்லை என்று இதோபதேசம் செய்யப்பட்டது. மா-சே-துங்கிற்கு இந்தியாவைப் பற்றியும், பஞ்ச சீலத்திலே கையெழுத்திட்ட பிரதமர் சூ-என்-லாய்க்குள்ள பரந்த மனப்பான்மையைப் பற்றியும், பண்டிதரும் அவர்தம் சகாக்களும் நாடு பூராவும் பிரச்சாரம் செய்தனர்.

பாண்டுங்மாநாட்டிலே 'அகில உலக கம்யூனிசக் கழகம்' கலைக்கப்பட வேண்டும் என்று பிரச்சனையின் அடிப்படையில் சிலோன் பிரதமர் கொத்லவாலா கைவைத்தபோது, முகம் சுண்டி அமர்ந்திருந்த சூ-என்-லாயை கைகொடுத்துத் தூக்கிய பெருமை நேருவுக்கே சாரும்.

ரஷ்யா - சீன உறவுகளைநாடி மேற்கத்தி நாடுகளோடு நெருங்கிய நட்புகொள்ள நேரு சர்க்கார் மறுத்துவிட்டது. இருந்தும் இன்று எல்லைத்தகராறு தோன்றுவானேன். அப்படியானால், நேருவின் வெளிநாட்டுக் கொள்கை தேவையான அளவு மிடுக்கோடு இல்லையா? அல்லது நமது தொடர்புகள் தவறான இடத்தில் வீணாக்கப்பட்டதா?

குண்டு வீச்சிலா ? குழுப் பேச்சிலா ?

நேற்றுவரை நமக்கு நண்பர்கள் என்று சித்தரிக்கப்பட்டவர்கள் இன்று குண்டுவீசி நிர்ணயிக்கத் துடிப்பானேன் எல்லைக் கோட்டை நட்போடு பேச்சு வார்த்தைகளை அலுவலகத்திலே நடத்தி, சரியான எல்லைக் கோட்டை படத்திலே வரைந்து எடுத்துச் செல்ல வேண்டிய நாகரீக முறையிருக்க அநாகரீக முறையில் சீன செல்வானேன்? கோமிங்டாங் சைன செய்த அவ்வளவு அநீதிகளையும் அழித்ததாகக் கூறும் மா-சே-துங் சர்க்கார், சியாங் சர்க்கார் போட்ட எல்லைப்படம் ஒன்றை மாத்திரம் விடாப் பிடியாகப் பிடித்துக்கொண்டு, இமயத்தில் இந்தியாவிற்கு சொந்தமான ஐம்பதாயிரம் சதுர மைல்கள் அளவுள்ள பூபாகம் தங்களுடையது என்று கூறினால், அது நமக்கு ஹிட்லரையும், அவனுக்கு முன்னால் வாழ்ந்த பல சர்வாதிகாரிகளின் வாழ்க்கைச் சம்பவங்களையும் தான் ஞாபகப்படுத்துகிறது. இந்தத் தவறான படம் சைனவில் பிரசுரிக்கப் பட்டிருப்பது ஐந்தாண்டுகளுக்கு முன்பே நேரு சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. இருந்தும் அப்பொழுது இருந்த "இந்தோ - சைன பாய்-பாய்" உறவு, சூ-என்-லாயிடம் எதையும் தட்டிக் கேட்க மறுத்தது. மிகச் சாதுர்யமாக சைனவை தன் பக்கம் சேர்த்துக் கொண்டோம் என்று மனப்பால் குடித்த நேரு பண்டிதருக்கு இன்றைய சைனவின் செயல்கள் பெருத்த பேரிடி. உலகத்தில் மேற்கத்தி நாடுகளும் நம்மை நம்பாத நிலையில், கம்யூனிஸ நாடுகளும் நம்மை துரத்தும் பரிதாப நிலையில் நாம் நிற்கிறோம். ஒரு அரசியல் எழுத்தாளன் கூறுவதுபோல், ஒவ்வொரு நாடும் நாம் தேவைப்படுகிறபோது நம் மீது நட்புகொள்கிறது. வேண்டாதபோது துச்சமாகத் தள்ளுகிறது. இப்படிப்பட்ட நிலையில் தான் நேரு சர்க்காரின் வெளிநாட்டுக் கொள்கை சென்ற 13 ஆண்டுகளில் நம்மை கொண்டு போய்விட்டிருக்கிறது.

நேருவின் கொள்கைகள் ஒரு புறமிருக்க திடீரென்று இந்த மக்கள் தூதர்கள் எல்லைப் போராட்டத்திலே இறங்கிய காரணம் என்ன?

உண்மையான கம்யூனிஸ்டு எவனும் தேசீய உணர்ச்சி வயப்படவே கூடாது. நாடு, எல்லைக்கோடு, ஜாதி, இனம் இவைகள் எல்லாவற்றையும் தாண்டி, மக்கள் எல்லோரும் ஓர் குலம் என்ற நிலையைத் தவிர வேறெந்த எண்ணத்திற்கும் மனதில் இடம் கொடுக்கக் கூடாது. ஜெர்மன் நாட்டிலே இருந்த கம்யூனிஸ்டுக் கட்சி சென்ற போரிலே ஜெர்மன் சர்க்காரோடு சேர மறுத்த காரணமும் ரஷ்யாவில் புரட்சி பூத்த போது அது நம்முடைய வெற்றி என்று உலக பாட்டாளிகள் கொண்டாடிய காரணமும் இதுதான். எல்லைக்கோடுகளுககுச் சண்டை போடுவதே ஏகாதிபத்தியத்தின் சதித் திட்டம் என்பர், சிகப்புக்கொடியோர், இருந்தும் இன்று லடாக் நாட்டிலே ஒன்பது பேர்களை சுடுவானேன்? இப்படி நேரு சர்க்காரோடு துப்பாக்கியால் காரியங்களை சாதித்துக்கொள்ள வேண்டுமென்ற எண்ணம் சூ-என்-லாய்க்கு எப்போது ஏற்பட்டது?

சிந்தனையில் இப்படி சில கேள்விகள் எழும்போதுதான் கம்யூனிஸ்ட்களும் ஜனநாயக வாதிகளும் நிரந்தர ஒற்றுமையாக இருக்கவே முடியாது என்று மேற்கத்திய எழுத்தாளர்கள் கூறுவது சரியோ என்று எண்ணத் தோன்றுகிறது.

சென்ற பத்தாண்டுகளில் சைனக்காரர்கள் நடந்த விதமும் இன்று நடக்கும் விதமும் நம்முடைய எண்ணத்தில் புதுக் கணக்குகளைப் போடச் சொல்கிறது. பத்து ஆண்டுகளுக்கு முன் கல்கத்தாவில் நடந்த கம்யூனிஸ்டு கூட்டமொன்றிற்கு சௌ-என்-லாய் அனுப்பிய வாழ்த்து இன்று நம் ஞாபகத்திற்கு வருகிறது. "நேரு சர்க்காரின் பிடியிலிருந்து விடுபட்டு சுதந்திரமடைந்த கம்யூனிச இந்தியாவை எதிர்நோக்குகிறோம்!" என்று அன்று கூறினர் சௌ. அந்த வாழ்த்துச் செய்தி வெளியில் தெரிந்தபின், அதைக் குறித்து ஆட்சேபித்து பீகிங்கிற்கு கடிதம் எழுதினர் நேரு சர்க்கார். அன்று, அதிகாரத்தில் அமர்ந்து சில நாட்களே ஆகியிருந்த காரணத்தால் அதிக சப்தம் செய்யாமல் வாழ்த்தை திரும்பப் பெற்றுக்கொண்டார், வாழ்த்துச் செய்தியில் இருக்கும் கருத்தை சௌ-என்-லாய் என்றும் மாற்றிக்கொள்ள வில்லை என்று இன்று நினைக்கவேண்டியிருக்கிறது.

அவர் பஞ்சசீலத்தில் கையெழுத்திடும் போதும், பாண்டுங் மாநாட்டிலே பேசும் போதும், ஜீனிவாவில் சிரித்து விளையாடிய போதும், எந்த நேரத்திலும் சைனவின் ஆதிக்கத்தை மனதில் வைத்துக்கொண்டு அதற்குத் தேவையான முறையில் சாகசங்கள் புரிந்திருக்கிறார். சியாங் கால் பாழ்படுத்தப்பட்ட சைனவை சீர்படுத்த அவகாசம் தேவைப் பட்டது. அதற்கேற்ற வண்ணம் வெளிநாட்டுக் கொள்கை நேற்றுவரை அமைக்கப் பட்டது. இன்றோ, சைன வில்ஓரளவு சுமூகமான நிலை ஏற்படுத்தியாகி விட்டது. நாட்டிலே பலமான சர்க்கார் நிறுவியாகி விட்டது. சியாங்கின் ஆட்களையும் அடக்கி ஒழித்தாகி விட்டனர். ஆகவே அடுத்தபடி, துணிவோடு இன்று உலக அரங்கில் சமாதானத்தையே கலைக்கும் வேலையில் இறங்கி இருக்கின்றனர்.

திபெத் நாட்டிலிருந்து துரத்தப்பட்ட தலாய்லாமாவை இந்த நாட்டிலே ஏற்றுக் கொள்ளாமலிருந்தால், சீன இந்தளவுக்கு எல்லைத் தகராறில் இறங்கி இருக்காது.

தெற்கு, தென்கிழக்கு, ஆசியாவில் கம்யூனிசம் பரவுவதற்கு இந்தியா பெரிய தடையாக இருக்கிறது. இங்கே ஜனநாயக முறையில் கட்சிகள் இயங்குவதும் இரண்டு தேர்தல்கள் ஒழுங்காக நடந்து முடிந்ததும், மேற்கத்தி நாடுகளோடு சுமுகமான முறையில் தொடர்புகள் இருப்பதும் கம்யூனிசம் பரவுவதற்கு பெரும் தடைக்கற்களாக இருக்கிறது. அதுவும் இரண்டு ஐந்தாண்டு திட்டங்கள் போட்டு, மூன்றாவதுத் திட்டமும் போடும் இந்தியா ஒரு வேளைபலம்வாய்ந்த நாடாக மாறி விட்டால் என் செய்வது? மக்கள் சுபிட்சம் பெற மக்களாட்சியே போதும் என்று நிரூபணம் ஆகிவிட்டால் என் செய்வது?

இப்படி பலவிதமாக சைனவின் போக்கை விவரிக்கின்றனர் அரசியல் அறிஞர்கள். இன்னும் சில எழுத்தாளர்கள், உள்நாட்டிலே இருக்கும் நாற்பத்தய்ந்து கோடி மக்களுக்கும் திருப்தியான முறையில் அரசாங்கம் நடத்த முடியாத கம்யூனிஸ்டு சர்க்கார்' வழக்கமாக சர்வாதிகாரிகள் செய்யும் முறைப்படி அந்நிய நாட்டோடு சண்டை துவங்குகின்றனர், என்கின்றனர். புல், பூண்டு முளைக்காமல், சூரியனைக் காணாத நேரம் அதிகமாக இருக்கும் இந்த பனிமலைத் தொடர்களில் மூன்று லட்சம் வீரர்களை பீகிங் சர்க்கார் குவித்து வைத்திருப்பதின் காரணம் என்ன?

நாட்டின் எல்லைக் கோட்டை அகற்றி சிகப்புச் சாயம் பூசுவது மகத்தான காரியமாயிற்றே! வெற்றி மாலை சூடிவரும் வீரர்களை பீகிங் வரவேற்கும்! நாட்டின் தேவைகள் எல்லைக் கோட்டை பாதுகாக்க (?) பலியாக்கப்படும்! இப்படி நாற்பத்தய்ந்து கோடி சைனக் காரர்களின் உணர்ச்சி உந்தப்பட்டு, பசியும், பஞ்சமும் அதிலே மறைக்கப்படும்!

இப்படி கூறப்படும் பல காரணங்களில் எது உண்மையோ அல்லது இவைகள் எல்லாம் சேர்ந்துதான் இந்த எல்லைத் தகராறு உற்பத்தியானதோ நமக்கு விளங்கவில்லை. ஆனால் ஒன்று மாத்திரம் தெரிகிறது. எல்லைத் தகராறு முற்றினால், நம்முடைய பணம் பூராவும் இமாலயத் தொடரையும், காஷ்மீர், லடாக், நேப்பால், சிக்கில், பூடான், வடகிழக்கு எல்லைப்பிரதேசம் இவைகளை பாது காப்பதிலேயே செலவழிக்கப்படும்.

ஆரம்பித்தத் திட்டங்கள் அவந்தரையாக பாதியிலே நிறுத்தப்பட வேண்டியதுதான். புதிய மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் பேப்பரிலே இருக்க வேண்டியதுதான்.

இவைகள் ஒரு புறமிருக்க இருக்கின்ற பொருளாதார நிலைமையும் பரிதாபகரமாக கிடக்கும். சர்க்கரை தேவையான அளவு இருப்பு இருக்கும்போது நம்மை உறிஞ்சும் கள்ள மார்க்கட்டுக் காரர்கள், எல்லைத் தகராறு முற்றி அந்த மாட்டிக் கொண்டால் நாட்டையே வேட்காடாக்கி, சமயம் நேர்ந்தால் நாட்டையே விலைபேசி விற்றுவிடுவர்!

உலகில் சமாதானம் நிலைக்கவும், நாட்டிலே நமது பண்பும் பழக்கமும் பாதுகாக்கப்படவும் மக்களின் வாழ்வு கெடாமலிருக்கவும் எந்தவிதமாகாவது பீகிங் சர்க்காரை நாகரீகப் பாதைக்கு அழைத்துவரவேண்டும். பேச்சு வார்த்தைகளிலேயே எல்லைக் கோடுகள் நிர்ணயிக்கப்பட வேண்டும். நாட்டைக் காக்க முன் வந்து ராணுவத்தில் சேர்ந்த வீர மகன்களை அரசியல் கொள்கைச் சூன்யம் காரணமாக பலியாக்குவது, ஆட்சிபுரிபவரின் திறமையின்மையைத்தான் காட்டும். இந்த நேரத்தில் உறுதியான எண்ணமும் திடமான சொலும் தேவை, டில்லிக்கு இந்தக் குணங்கள் இருப்பதாக இதுவரைத் தெரியவில்லை! இப்பொழுதாவது வருமா என்று பார்க்கலாம்!

★

முல்லை மடல்.!

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

விட்டுப் பேசினால் – பாகிஸ்தானுடன்ஏற்பட்டுள்ள சுமுகமான உறவுப்போல் – இங்கும் ஏற்படும் என்று நான் எண்ணுவதில் தவறில்லை அல்லவா ?

சீன நாட்டின் உறவு விட்டுப் போகக்கூடாதென்றுதானே ஐக்கிய நாட்டு சபையில், ஐயர்லாந்தும், மலேயாவும், திபெத்தைப் பற்றிக்கொண்டு வந்ததீர்மானத்தில் இந்திய நாட்டு பிரதிநிதி வி. கே. கிருஷ்ணமேனன், கலந்துக் கொள்ளாமல், இருந்திருக்கிறார். பல இலட்சங்கள் நாள் தோறும் தலாய்லாமாவிற்குச்சில வழிக்கும், இந்தியாதான் திபெத் பிரச்சனையில், ஐ. நா, வில் மௌன விரதம் அனுஷ்டித்திருக்கிறது. எல்லையில் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பிற்கு எண்ணெவார்கக் கூடாதென்று கிருஷ்ணமேனன் நினைத்திருக்கக்கூடும். ஆக எல்லையில் ஏற்பட்டுள்ள இந்த தொல்லை உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டும்! சேற்றில் ஒரு காலும், ஆற்றில் ஒரு காலும் வைத்து திண்டாடிக் கொண்டிருக்கும் நேரு துரைத்தனம், இதற்கு எந்த முறையில் பரிகாரம் தேடப் போகிறார்களோ! புதிய பாதை ஒன்றை துவங்கி, புதிய குழப்பத்தை ஏற்படுத்திக் கொண்டாலும் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை! ஏன்னென்றால் நேரு கடைப்பிடிக்கின்ற வெளிநாட்டுக் கொள்கை யாருக்கும் எதிரியல்ல, யாருக்கும் நண்பனும் அல்ல, என்ற முறை, நாளுக்குநாள் புதிய, புதிய பிரச்சனைகளை கிளம்பிக் கொண்டேயிருக்கிறது!

இந்த நாட்டை 'புனருத்தாரணம்' செய்கின்றோம் என்று ஐந்தாண்டு திட்டங்களை தீட்டி அவைகளை நிறைவேற்ற உலகத்தின் பல்வேறு நாடுகளின் கதவுகளைத் தட்டி 'பவதி' பிச்சாந்தேகிப்போல் உதவி கேட்கும் இந்நாடு, எப்படி வெளிநாட்டு விவகாரங்களில் ஒரு திட்டவட்டமான முடிவை எடுக்க முடியும்?

அண்மையில் ஆறு வாரக் காலமாக அயல் நாடுகளில் சுற்றுப்பயணம் செய்துவிட்டு திரும்பிய மத்திய அரசின் நிதி மந்திரி மொராஜி தேசாய், கல்கத்தாவில் காலடி வைத்ததும், 'எங்கும் நான் பிச்சைக் கேட்கப் போகவில்லை' என்று பறைச்சாற்றினார். ஆனால் அவரின் சுற்றுப்பயணத்தைப்பற்றி அவர் மந்திரி சபைக்கு சமர்பித்த அறிக்கையில், அமெரிக்காவில் அரசாங்கத்தாருடனும், தனிப்பட்ட தொழிலதிபர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தியதில், அவர்கள் இந்நாட்டு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் வெற்றிப் பெற பொருளதவிச் செய்ய ஊக்கம் காட்டுவதாகவும், இரஷியா 375 மில்லியன் டாலர் உதவி புரிய முன்வந்திருப்பதாகவும் அறிவித்துள்ளார்! பிச்சைக் கேட்கப் போகவில்லை என்று முழக்கமிட்ட பிரபுதான் தனது பிச்சை பாத்திரத்தில் நிரம்பிய பொருள்களை எடுத்துக் காட்டி, பெருமைப்பட்டுக் கொண்டுள்ளார்! சீனாவிடமிருந்தும் உதவி எதிர்பார்க்கிறேன் என்று கூறி அதற்குப்பின் எல்லையில் ஏற்பட்ட கோளாறின் காரணமாகவோ, என்னவோ, சீன நாட்டில் உதவி எதிர்பார்க்கவில்லை என்பதைதத்தான் பத்திரிக்கைகள் தவறாக பிரசுரித்துவிட்டன என்று பத்திரிக்கைகள் மீது பழியை போட்டுள்ளார்! நிதிமந்திரிகள் பத்திரிக்கைகள்மீது இத்தகைய அபாண்ட பழியை சுமத்துவது புதியதல்ல! ஏற்கனவே நிதி மந்திரியாக இருந்த டி. டி. கிருஷ்ணமாச்சாரி, அமெரிக்கா தனது முதுகில் தட்டிக் கொடுக்க வேண்டும் என்பதற்காக, ஏதோ பேசி, அதற்கு கண்டனக்குரல் நாடெங்கும் எழுந்த காரணத்தால், அதை மறைக்க முடியாமல் திணறி, பத்திரிக்கைகள்மீது பழியை சுமத்திவிட்டு இன்று கோடைக்கானலிலே ஓய்வுப் பெற்றுக்கொண்டிருக்கிறார். ஆக சமயத்திற்கு ஒரு வேஷம்போடும் பகல் வேஷதாரிகளாகி விட்டார்கள் இந்நாட்டின் லகானை கைப்பற்றியுள்ள, மதியூக மந்திரிகள்! இவர்களால் இந்திய எல்லையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி சுமுகமாக தீர்க்கப்படுமா என்பது ஐயமே! பொறுத்துப் பார்ப்போம்!

உனக்கு கருத்து விளக்கம் செய்யும் அளவுக்கு நான் ஞானசிரியன் இல்லைஎன்றாலும், ஓரளவிற்கு இன்று நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளைக்கோர்வைப்படுத்தி தருவதிலாவது நான் வெற்றிப் பெற்றிருக்கிறேனா ?

நீண்டக் கடிதம்போல் தோன்றுகிறதல்லவா? அப்பா, அம்மா, மேகலா, தாத்தா, பாட்டி, மாமரங்கள் – நமது தோட்டத்து கிணறு. வளர்ந்துள்ள கரும்புத் தோட்டம், இப்படிப் பட்டவைகளுக்கப்பால் திபெத்எல்லைப்பற்றியும், அமெரிக்கா டாலரைப் பற்றியும் நான்வரைவது உனக்கு அப்பாற்பட்டதாக இருக்கலாம், மகளே! இன்று உலகத்தை நாம் ஒதுக்கினாலும், அது நம்மை ஒதுக்காதளவிற்கு நமது வாழ்க்கை அத்துடன்பிணைந்துள்ளது. ஆகவே உலக அரங்கில் நடைபெறுகின்றன நானாவித நிகழ்ச்சிகளையும். நீ அறிந்துக் கொள்ளவேண்டிய அவசியமும் காலமும் வந்து விட்டது, என்பதை உணர்வாயாக! அஞ்சலுக்குநேரமாகி விட்டது! அடுத்த வாரம் சந்திப்போம்! கடித மூலமாகத்தான் !!

உன் சித்தப்பா.

தேர்தல் தகிடுதத்தம்!

★

நமக்குப் படுதோல்வி என்று தலைப்பிட்ட ஏடு கூறும் காரணம் !

"தேர்தலில் பணம்கொடுத்து வோட்டு வாங்குவது இப்போது அதிகரித்து விட்டது. இது சுதந்திரம் என்ற பெண்ணை காசுக்கு விற்பது போலாகும். மனைவியை காசு கொடுத்துக் வாங்கவும் முடியாது. காசுக்கு விற்கவும் முடியாது. வோட்டும் அப்படிப்பட்டதுதான்..." என்று ராஜாஜி, கூறுகிறார்.

சொல்லப்போனால் வோட்டு என்பது கடைச் சரக்காக மாறி விட்டது. இதிலே கலவையும் உண்டு. கள்ளச்சரக்கும்உண்டு. பதுக்கலும் உண்டு. சகலமும் காசுக்காக நடைபெறும்போது இத்தகைய ஒரு சூழ்நிலை இருப்பததைக்கண்டு யாரும் ஆச்சரியப் பட முடியாது.

* * *

ஆட்டு மூளை, கரடிப்பிடி, அரக்கன் செயல் என்ற முக்கோண மனிதர்களுக்கு ஜனநாயகம், தத்துவம், பண்பாடு இவையெல்லாம் புரியாது. மனிதப் பண்பு என்பது அவர்களிடம் செல்லாக் காசு. பணமிருந்தால் எதையும் [illegible]த்துவிடலாம் என்ற எண்ணம்தான் தலைதூக்கி நிற்கும். அதிலே வெற்றியும கண்டு விடுகிறார்கள்.

ஆட்டு மூளை மனிதனை அறிவாளி, சிந்தனைச் சிற்பி, சிறந்த தொழில் நிபுணன் என்றெல்லாம் விளம்பரப்படுத்த கைக்கூலி பிரச்சார கோஷ்டிதான் தேவை. பண விவகாரத்தில் கரடிப்பிடி மனிதனைக்கூட காருண்யமூர்த்தி என்று பிரச்சாரம் செய்பவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள்.

* * *

இரும்பு பிடித்தவன் கையும் சிரங்கு பிடித்தவன் கையும் சும்மா இருக்காது என்பார்கள். அதேபோன்றுபணப்பசைஉள்ள இடத்தில் கரடிப்பிடி போட்டு பழக்கப்பட்டவனின் திருக்கரங்களும் சும்மா இருக்காது. அடுத்தப் பிடிக்கு பசை எங்கே இருக்கிறது என்பதில்தான் கண்ணும் கருத்துமாக இருப்பார்கள். இப்படிப்பட்ட புதைபொருள் ஆராய்ச்சி நிபுணர்கள் இருக்கும் போது தேர்தல் காலத்தில்பணத்தின் மகிமை தலைதூக்கி நிற்காமலா இருக்கும்.

* * *

பணத்தைக் கொண்டு சகல காரியங்களையும்சாதித்துருசிகண்டவன் தேர்தல் காலத்திலும் அதைசாதித்துவிட முடியுமென்று நினைக்கிறான். ஆனால் அதை யாரும் வெளியே சொல்ல மாட்டார்கள்.

"என்னிடம் பணம் இருக்கிறது. அதனால்தான் தேர்தலில் நிற்கிறேன். அதைத் தவிர எனக்குவேறு யோக்கியதையோ தகுதியோ கிடையாது" என்ற உண்மையை மனச் சாட்சிப்படி வெளியே சொல்லும் உத்தமன் யாரவது உண்டா? அல்லது இருக்கிறார்கள் என்றுதான் மற்றவர்கள் எதிர்ப்பார்க் முடிமயா ?

* * *

வர்த்தகத்தில் வாங்குவோர் மார்ககட், விற்பனையாளர் மார்க்கெட் என்று இரு பிரிவு உண்டு. சரக்கு மலியும்போது வாங்குபவர்கள் விருப்பம்போல் பேரம் பேசுவார்கள். சரக்கு கிராக்கியாக இருக்கும்போது விற்பவர்கள் நினைத்தப்படி விலையைக் கூட்டி விடுவர்ர்கள்.

தேர்தல் காலத்திலும், இதே கதை இல்லை என்று சொல்ல முடியாது. போட்டி க்டுமையாக இருந்தால் சரக்கும் கிராக்கியாக இருக்கும். போட்டி ஒரு தலைப் பட்சமாக இருந்தால் சரக்கு மலிந்துவிடும். காசு எதுவும கொடுக்காமல் வாகன சவாரியிலேயே கரியத்தைச் சாதித்துவிடுவார்கள்.

* * *

இந்த சூழ்நிலையில் ஜனநாயகத்தைக் காப்பாற்ற வழிஎன்ன?

கொடுத்தாலும் வேண்டாமென்று உதறித் தள்ளும் அளவுக்கு பணப்பசைமீது வோட்டர்களுக்குப் பிடி தளர்ந்து விட்டது என்று நினைக்க முடியாது.

யார் வந்தாலும், யார் போனாலும் காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ள வேண்டும் என்ற கைங்கரியத்தில் எவ்வளவோ பேர் இருக்கிறார்கள், ஆனால் பணத்தையும் வாங்கிக்கொண்டு தேர்தலில் பட்டையைச் சாத்திவிட்டால் சிறிது காலத்திற்குப் பிறகாவது கொடுப்பவர்கள் விஷயத்தைப் புரிந்துகொள்வார்கள்.

பச்சை விபச்சாரத்திலும் நாணயம் வேண்டாமா என்று மட்டும்கேடடுவிடாதீர்கள். அது இப்போது எங்கும் இல்லை!

(நவ இந்தியாவில் ஊர் வம்பு என்ற தலைப்பில் பூ. ஆர்.)

அச்சிடுபவர் : கே. இராசாராம், பி.ஏ., கஸ்தூரி லித்தோ ஒர்க்ஸ், 34, சின்னத்தம்பி தெரு, சென்னை-1.
ஆசிரியரும், வெளியிடுபவரும் : கே. ஏ. மதியழகன், பி.ஏ., 126, மவுண்ட் ரோடு, சென்னை-6.